

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : ஆப்பிரிக்காவில் உள்ள கிறிஸ்தவர்கள்: ஆப்பிரிக்காவில் உள்ள கிறிஸ்தவர்கள், இரக்கமுள்ள இயேசுவைப்போல் ஒப்புரவு, நீதி மற்றும் சமாதானத்தின் இறைவாக்களிக்கும் சாட்சிகளாக திகழ வேண்டுமென்று**

மே மாத கரு : **மரியா அனைத்து நாடுகளின் விண்மீன்**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| மே 14 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | உயிர்ப்பின் 5ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | உயிர்ப்பின் 5ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | சிறார்களுக்கான திருப்பலி @ பெர் .மையம் |
| மே 20 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித பெர்னாடின் |
| மே 21 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | உயிர்ப்பின் 6ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, த, ம) | உயிர்ப்பின் 6ஆம் ஞாயிறு- உறுதிபூசுதல் 2017 |

## பங்கு நடவடிக்கைகள்

| **மே 15 ~ 20** | **மாலை 7.30** | **புலூமா** | **அதிச வாரம்** |
|---|---|---|---|
| மே 14 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| மே 16 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| மே 18 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| மே 19 வெள் | மாலை 7.00 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு விளக்கவுரை (பெற்றோர்கள்& ஞானப்பெற்றோர்கள்) |
| மே 20 சனி | காலை 10.00 | பெர். மை 2-5 | சீடத்துவ நிகழ்வு |
| | மாலை 4.30 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு |
| | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| | மாலை 6.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| 21 மே ~ 4 ஜூன் 2017 மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் 11 ஜூன் 2017 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும். | | | |

<u>மே & ஜூன் மாத திருமணங்கள் 2017</u>

மே 27 மாலை 4.30 திருமணம் (த) எட்மண் பாஸ் த/பெ அருளப்பன் & கேப்ரினா இன்ப கீதா த/பெ சுப்ரமணியம்

ஜூன் 2 மாலை 4.30 திருமணம் (த) எரிக் ராஜ் த/பெ அருளப்பன் & ஆரோக்கியமேரி த/பெ கனகரெத்னம்

ஜூன் 3 காலை 11.00 திருமணம் (ஆ) பெனடிக் பேரிஷ் K த/பெ அருளானந்தம் & சில்வியா த/பெ தேவதாசன்@ ரோபர்ட்

ஜூன் 3 மாலை 4.30 திருமணம் (த) அமிர்த ராஜ் த/பெ ஜோக்கிம் & ஏனா சப்ரினா த/பெ ஜேக்கப்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. திருப்பலி இல்லை:** பினாங்கில் குருக்களின் ஒன்றுக்கூடுதலையொட்டி நமது பங்கில் 15 மே (திங்) ~ 19 மே (வெள்) வரை திருப்பலி நடைப்பெறாது.

**2. பாரம்பரிய காட்சியகம்:** ஈப்போ, லூர்து பாரம்பரிய காட்சியகத்திற்கு பதிவு, ஆராய்ச்சி, மற்றும் பராமரிப்பு செய்ய உறுப்பினர்களும், தன்னார்வலர்களும் மிகவும் தேவைப்படுகிறார்கள். ஆர்வமுள்ளோர் தயவு செய்து உங்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் கொடுக்கவும்.

**3. இளைஞர்கள் பணிகள்:** பங்கு இளைஞர்கள் இந்தோனேசியாவில் நடைபெற உள்ள ஆசியா இளைஞர் தினத்திற்கு திருப்பயணம் செல்வதற்கு நிதி திரட்ட 28 மே 2017 (ஞாயிறு) மதிய உணவு விற்க ஏற்பாடு செய்யப்படும். டிக்கெட்டுகள் 14 மே 2017 (ஞாயிறு) திருப்பலிக்கு பிறகு விற்பனை செய்யப்படும். தயவு செய்து உங்களது முழு ஆதரவை தாருங்கள்.

**4. மலேசியன் கத்தோலிக்க முகாம் மாணவர்கள் தினம் 2: நாள்**: 23~27 ஜூன் 2017 (வெள்~செவ்) **இடம்**: பினாங்கு தீவு

**தொடர்புக்கு**: பினாங்கு மறைமாவட்ட இளைஞர் கட்டமைப்பு (04-2274851)/ மின்னஞ்சல்: pdyn@pgdiocese.org

**5. வேலைவாய்ப்பு:** கத்தோலிக்க சமூக அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக நாங்கள் ஏழைகளுக்கும், வேலை இல்லாதவர்களுக்கும் வேலையை கொடுக்கின்றோம். கத்தோலிக்கர்களாக இருக்க வேண்டும். வயது 35-45. தனித்தவர்கள் மற்றும் திருமணமாகாதவர்கள். நல்ல வருமானம் நிச்சயம். மலேசியாவின் அனைத்து மாநிலத்திலும் அடிப்படையாக கொண்ட வேலை. கோலாலம்பூரில் தலைமையகம். தொடர்புக்கு குமாரி. ரின்னி (019-2550703)

**6. 2017/ 2018 முதியோர் திருமுழுக்கு (தமிழ் & ஆங்கிலம்) - புதிய ஆள் சேர்ப்பு (யோவான் 1:39) "வந்து பாருங்கள்"** புதிய வகுப்புகள் 22 ஜூன் 2017ல் தொடங்கும். யாருக்கு முதியோர் திருமுழுக்கு? திருமுழுக்கு பெறாத பெரியவர்கள், மற்ற கத்தோலிக்க அல்லாத கிறிஸ்துவ பாரம்பரியத்தில் திருமுழுக்கு பெற்ற பெரியவர்கள். புது நன்மை, உறுதிபூசுதல் அருள்சாதனங்களைப் பெறாத கத்தோலிக்க பெரியவர்கள். அதிச & பணிக்குழு தலைவர்கள் இந்த தகவலை பரப்புங்கள். உங்கள் பெயர்களை இப்பொழுதே பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யலாம். **இறுதி நாள்**: 15/06/2017. மேல் விபரங்களுக்கு பங்கு குருவானவர்கள்: தந். ரோபர்ட் டேனியல்/ தந். சைமன் ஆனந்த் (பங்கு அலுவலகம் 05-5279349)/ திரு.ஜேரோம் சாமுவேல்: 05-5268329/ 012-6786911

**7. புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு (கு) :** அன்பு பெற்றோர்களே, எதிர்வரும் 21 மே 2017 (ஞாயிறு) காலை 7.00மணி திருப்பலியில் தங்களின் பிள்ளைகள் புனித சிசிலியா பாடற்குழு, பங்கேற்று பாட இருப்பதால் 20 மே 2017 (சனி) மாலை 6.30க்கு நமது ஆலயத்தில் அவர்களுக்கான முழுமையான பாடற்பயிற்சி நடைபெற இருக்கின்றது. எனவே, தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**8. அன்னையர் தின கலை நிகழ்ச்சி:** 14 மே 2017 (ஞாயிறு) நமது பங்கு மண்டபத்தில் அன்னையர் தின கலை நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கிறது. மாலை 6.00க்கு (நூடல்ஸ்+coffee) நட்புறவுடன் தொடங்கும் இந்நிகழ்ச்சியில் நடனம், பாடல், சொற்போர், "நம்மிடமுள்ள மூட நம்பிக்கைகள்- வாதாட்டம்" இவைகளோடு "கானாவூர் கல்யாணம்" குறுநாடகத்துடன் பாத்திமாவில் மாதா கொடுத்த காட்சிஉம் நடைபெறும். தாய்மார்கள் அனைவரோடும் எல்லோரும் வந்து நிகழ்ச்சியை பார்த்து மகிழ நமது ஆலய கலாச்சாரக்குழு அழைக்கிறது.

**9. நோயாளர் ஆசீர்வாதம்:** அதிச தலைவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் கவனத்திற்கு. தயவு செய்து இதை முக்கியமானதாக எடுத்துக்கொள்ளுங்கள். உங்களது அதிச மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆசீர்வாதம் தேவைப்பட்டால் உடனடியாக பங்கு குருவானவர்களிடம் தெரிவியுங்கள். கடைசி நிமிடம் வரை காத்திருக்க வேண்டாம்.

**10. அடக்க ஏற்பாடு:** அடுத்த 5 வருடங்களுக்கு தம்பூனில் உள்ள கத்தோலிக்க கல்லறையை புனித சகாய மாதா தேவாலயம் நிர்வாகம் செய்யும். நமது பங்கில் ஏதேனும் மரணம் ஏற்பட்டால் உடனடியாக திருப்பலிக்கான ஏற்பாட்டிற்கு புலூமா பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். அதன் பிறகு அடக்கத்திற்கான ஏற்பாட்டிற்கு நீங்கள் உடனடியாக புனித சகாய மாதா தேவாலயத்தை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். மற்ற நேரங்களில் தோமஸ் ஜீ (012-5182818) தொடர்பு கொள்ளவும்.

**11. தம்பூன் கல்லறையில் அடக்கம் செய்ய இடங்கள்:** தம்பூன் கல்லறையில் தற்போது சுமார் 1,000 இடங்களே உள்ளன. இவை சுமார் 10 ஆண்டுகளுக்கு போதுமானவை. நாம் வேறு இடங்களை தேடும் வேளையில், நாம் நமது பங்கு மக்களை தங்களின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டிமார்களின் கல்லறைகளில் சாம்பல் துவாரங்களை இட ஊக்குவிக்கிறோம். இவ்வாறு செய்தால் தம்பூன் கல்லறையில் பயன்பாட்டை நீட்டிக்கலாம். ஒவ்வொரு கல்லறையிலும் நீங்கள் 6 துவாரங்கள் இட முடியும். தயவு செய்து சிந்தியுங்கள்!

**12. சிற்றாலய கட்டுமான திட்டங்கள்:** ஒவ்வொரு சிற்றாலயம் கட்டுவதற்கு (கிஅ/ அவே) உச்ச வரம்பாக ரிம 1.2 மில்லியன் என ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. அந்த திட்டம் அதனை விட மலிவாகவும் இருக்கக் கூடும். எவ்வாறாயினும், எந்த திட்டமும் 80% பணம் வங்கியில் இல்லாமல் தொடங்கப்பட முடியாது. இந்த வகையில் நமது ஒவ்வொரு சிற்றாலயம் கட்டும் பணியை தொடங்க நம்மிடம் குறைந்தது ரிம 960,000.00 இருக்க வேண்டும். இது பினாங்கு மறைமாவட்ட கொள்கை. "நீங்கள் திட்டத்தை தொடங்குங்கள், நாங்கள் பிறகு தருகிறோம்" என்ற பேச்சு தேவையில்லை. நம்மிடம் பணம் இருந்தால் நாம் கட்டுவோம், இல்லையேல் நம்மிடம் பணம் வந்து சேரும் வரை காத்திருப்போம்!!!

**13. அதிச மறுசீரமைப்பு:** பினாங்கு மறைமாவட்ட அதிச அமைப்பு கொள்கைப்படி அதிசக்கள் மறுசீரமைப்பு செய்யப்படும். ஒவ்வொரு அதிசவிலும் 15க்கும் குறைவான குடும்பங்களே இருக்க ஊக்குவிக்கப்படுகின்றன. எனவே, 15 குடும்பங்களுக்கும் மேலுள்ள அதிசக்கள் பிரிக்கப்பட்டு, புதிய தனி அதிசக்கள் உருவாக்கப்படும். எப்படி இருப்பினும் முடிவு பங்கின் குருவானவர்களின் விவேகத்திற்கு உட்பட்டது.

**14. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஏப்ரல் 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **317,842.03** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **334,891.43** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)

**07/05/17 திருப்பலி வசூல்கள்:** **காலை** 9.00 - RM 1,388.10

**2016** - RM 20.00 **2017** - RM 230.00 **மொத்தம்**– RM 250.00 **ஏழைகளுக்கு**– RM 1,234.55

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்